# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 66/ந/2025
நாள்:. 24.03.2025

திரு. த. தணிகாசலம்,
மதுரப்பாக்கம், விழுப்புரம் மாவட்டம். . . . முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர், . . . எதிர்மனுதாரர்
கோட்டகுப்பம் நகராட்சி, விழுப்புரம் மாவட்டம்.

விழுப்புரம் மாவட்டம், மதரபாக்கம் அஞ்சல், மூலங்கில்பட்டு கிராமம், விநாயகர் கோயில் தெரு, என். 2/5 என்ற முகவரியை சேர்ந்த திரு. த. தணிகாசலம் என்பவரது 28.03.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.03.2024 அன்று பெறப்பட்டு, 66/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், மதரபாக்கம் அஞ்சல், மூலங்கில்பட்டு கிராமம், விநாயகர் கோயில் தெரு, என். 2/5 என்ற முகவரியை சேர்ந்த திரு. த. தணிகாசலம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் 01.02.1995–ல் விக்கிரவாண்டி பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியில் சேர்ந்தேன். அதன் பின்பு பல இடங்களில் பணியாற்றி, கடந்த 21.09.2016–ல் வரித்தண்டலராக பதவி உயர்வு பெற்று கோட்டக்குப்பம் பேரூராட்சி அலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணியாற்றி வந்தேன்.

இந்நிலையில் 17.12.2021 தேதியில் கோட்டக்குப்பத்தை பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக மாற்ற உத்தரவிடப்பட்டது. அப்போது அரசிடமிருந்து நகராட்சியில் பணிபுரிய என்னிடம் ஒப்புதல் கோரியபோது நான் மறுப்பு தெரிவித்து என்னை கோட்டக்குப்பம் நகராட்சி அலுவலகத்திலிருந்து விடுவிப்பதாக கூறி தேர்தல் பணி காரணமாக 31.03.2023 வரை அதே அலுவலகத்தில் வைத்து பணி புரிய செய்தனர். அப்போது சொத்து வரி உயர்த்தப்பட்டதற்கான நோட்டீசை பொதுமக்களிடம்

விநியோகித்து, சொத்து வரி வசூல் செய்தோம். பொதுவாக நகராட்சியில் நான்கு வரித்தண்டலர் பணிபுரிய வேண்டிய இடத்தில் இரண்டு வரித்தண்டலர்கள் மட்டுமே வசூல் செய்தோம். அதன் பின்பு 31.03.2023 அன்று என்னை மேற்படி நகராட்சியிலிருந்து விடுவித்து 21.05.2023 வரை பணி வழங்கப்படாமல் இருந்து 22.05.2023 தேதியில் பேரூராட்சி அலுவலகம், அரகண்டநல்லூரில் பணி வழங்கினார்கள். 31.05.2023 தேதியில் பணி ஓய்வு பெற்றேன்.

நான் பணி ஓய்வு பெற்ற பிறகு எனக்கு சேரவேண்டிய பணப் பலன்களை எதுவும் வழங்காமல் நிறுத்தி வைத்துவிட்டனர். நான் கோட்டகுப்பம் பேரூராட்சி அலுவலத்தில் பணியாற்றியபோது நகராட்சியாக மாறிய காலக்கட்டத்தில் வரித்தண்டலராக பணியாற்றிய காலத்தில் எனக்களிக்கப்பட்டிருந்த வரியினங்களை முறையே வசூல் செய்து அரசுக்கு செலுத்தியிருந்தேன். ஆனால் எனக்கு பொறுப்பில்லாத பொறியாளர் பிரிவைச் சேர்ந்த வரியில்லாத இனமான குடிநீர் கட்டணம் நான் பணியில் சேர்வதற்கு முன்பிருந்து நிலுவையில் சுமார் 1 கோடிக்கு மேல் இருந்த குடிநீர் கட்டணம் பேரூராட்சியாக அலுவலகம் மாறியபிறகு சுமார் ரூ. 45,00,000/– வசூலிக்கப்பட்டது. என்னை மேற்படி அலுவலகத்திலிருந்து விடுவிக்கும் போது இருந்த நிலுவைத்தொகைக்கு 30% கணக்கிட்டு ரூ.5,79,871/– ஐ எனது சேமநல நிதி ரூ.3,94,000/–த்தை பிடித்தம் செய்து என்னிடம் ரூ.1,85,134/– பணமாக பெற்றுக்கொண்டனர். நான் செய்வதறியாமல் திகைத்து எனது ஓய்வு காலத்திற்கு பின்பு எனது குடும்பத்தை எவ்வாறு நடத்துவதென்று தெரியாமல் மிகுந்த மன உளைச்சலுடன் வாழ்ந்து வருகிறேன்.

எனது பொறுப்பில்லாத வரியில்லாத இனமான குடிநீர் கட்டணத்தை நான் வசூல் செய்யவில்லை என்ற நகராட்சி விதிகளுக்கு முரணான ஒரு நடவடிக்கை என் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் மட்டுமே இதற்கு பொறுப்பானவர்கள் ஆவார்கள். இதில் எனது தவறு எதுவும் இல்லை. நான் எனது கடமையை சரியாக செய்துள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு இருக்க என்ன காரணத்திற்காகவோ என்னை இவ்வாறு, நகராட்சி விதிகளுக்கு முரணாக எனது குடும்ப சேம நல நிதி தொகையையும் பிடித்துக்கொண்டு, என்னிடமும் பணம் பெற்றுக்கொண்டு என்னை நிர்கதியாக்கி உள்ளனர்.

எனவே கனம் ஐயா அவர்கள் பொறியாளர் பிரிவு அலுவலர்கள் செய்யவேண்டிய பணியை, நான் செய்யவில்லை என்று நகராட்சி விதிகளுக்கு முரணாக வேறு எந்த காரணத்திற்காகவோ என்னை பழிவாங்கும் அலுவலர்களிடமிருந்து எனக்கு சேரவேண்டிய சேமநலநிதி மற்றும் என்னிடமிருந்து வசூல் செய்த ரொக்கம் ரூ.1,85,134/– ஐயும் எனக்கு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள மிக்கப்பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னைப் போன்று வரித்தண்டலர்கள் என்னுடன் 4 நபர்கள் ஓய்வு பெற்றனர். அவர்களுக்கெல்லாம் எந்த பிரச்சனயும் இன்றி ஓய்வு அளித்து அவர்களுக்கு சேரவேண்டிய பணப்பலன்களை அளித்துள்ளனர். எனக்கு மட்டும் ஓய்வு பெறுவதற்கு ஒரு நாள் முன்பு என் மீது இவ்வாறான முறையற்ற குற்றச்சாட்டை ஏற்படுத்தி எனக்கு எவ்வித விளக்கமும் அளிக்காமல், எனது குடும்ப சேம நலநிதியை பிடித்துக்கொண்டும், என்னிடமிருந்து ரூ.1,85,134/– ஐ பெற்றுக் கொண்டு என்னை அலைக்கழித்து வருகிறார்கள்.

எனவே கனம் ஐயா அவர்கள் இதன் மீது தக்க நடவடிக்கை எடுத்து எனக்கு ஒரு நல்ல தீர்ப்பு வழங்கி எனக்கு சேரவேண்டிய தொகையை எனக்கு வழங்க ஆவன செய்து எனது ஓய்வுக்கு பிறகு நானும் எனது குடும்பமும் நிம்மதியாக வாழ வழிவகை செய்து உதவும்படி மிக்கப்பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோட்டகுப்பம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) கோட்டகுப்பம் நகராட்சி ஆணையரின் 16.12.2024 நாளிட்ட கடிதத்தின் வழி கீழ்க்கண்டவாறு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

"கோட்டக்குப்பம் நகராட்சியில் 21.09.2016 முதல் 31.03.2023 வரை வரித்தண்டலராக பணிபுரிந்து 01.04.2023 முதல் 31.05.2023 வரை அரங்கண்டநல்லூர் பேரூராட்சிக்கு பணிமாறுதலில் சென்று வயது முதிர்வின் காரணமாக 31.05.2023ல் திரு. த. தணிகாசலம் ஓய்வு பெற்றுள்ளார். கோட்டக்குப்பம் நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் காலம் கடந்த வரியினங்கள் மீது வசூலிக்கப்படாததால் பொறுப்புத்தொகையை தனியருக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கோட்டக்குப்பம் நகராட்சி கருவூலத்தில் கீழ்கண்டவாறு தொகை செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | தனியரின் சேமநலநிதியில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | = ரூ.3,94,737/– |
| 2) | தனியரால் நகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்ட தொகை | = ரூ.1,85,134/– |
| | மொத்தம் | = ரூ.5,79,871/– |

இதனை தொடர்ந்து மேற்படி தொகையை வழங்க கோரி திரு. த.தணிகாசலம் என்பவரால் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.1794/2024–ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் தனியருக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்களை நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கபெற்ற 4 வாரங்களுக்குள் வழங்குமாறு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

மாண்பமை உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி தனியருக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 5,79,871/– க்கான இந்தியன் வங்கி காசோலை எண்.746884, நாள் 12.09.2024 தனி நபர் மூலம் நேரில் சென்று திரு. த.தணிகாசலம் என்பவருக்கு வழங்கப்பட்டு, காசோலை பெறப்பட்டதற்கான ஒப்புகை இரசீதும் 17.09.2024ம் தேதியிட்டு பெறப்பட்டுள்ளது. மேலும் தனியருக்கு வழங்கப்பட்டுள்ள காசோலை ரூ.5,79,871/– யை திரு. த.தணிகாசலம் பெயருக்கு வங்கி மூலம் 19.09.2024ல் வரவு வைக்கப்பட்டுள்ளது.

Thiru N. Beulah John Selvaraj, Advocate & Notary Public, No.2, Kondi (C) Street, 4th floor, Room No.46, Parrys, Chennai மூலம் திரு. த.தணிகாசலம் ஓய்வு பெற்ற வரி தண்டலருக்கு வழங்கப்பட்ட சேமநல நிதி தொகைக்கான வட்டி தொகை வழங்க திரு. த.தணிகாசலம் என்பவரால் கோரப்பட்டுள்ளது. கோட்டக்குப்பம் நகராட்சியில் பேரூராட்சியாக இருந்த 1995–1999 முதல் 2023–2024 வரை சேமநல நிதி வட்டி கணக்கீடு செய்ய விலைப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கையில் உள்ளது.

வட்டி கணக்கீடு செய்யும் பணி முடிந்தவுடன் உரிய முன்மொழிகளை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை, அவர்களின் ஒப்புதல் (ம) நிதி பெறப்பட்டவுடன் அனைத்து பணியாளர்களுக்கு வட்டி தொகையை பகிர்ந்தளிக்கப்படும் போது தனியருக்கும், வட்டி தொகை வழங்கப்படும் என மனுதாரரின் வழக்கறிஞர் மற்றும் மனுதாரருக்கு விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் கோட்டகுப்பம் நகராட்சி ஆணையரும் 17.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.12.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. த. தணிகாசலம் என்பவர் 17.12.2024 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6) எதிர்மனுதாரரான கோட்டகுப்பம் நகராட்சி ஆணையர் தனது 16.12.2024 நாளிட்ட கடிதத்தில் 17.12.2024 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் தலைமை செயலாளர் அவர்களால் நடத்தப்படவுள்ள ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதால், தனது சார்பில் கோட்டகுப்பம் நகராட்சி வருவாய் ஆய்வர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 17.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அதன்படி கோட்டகுப்பம் நகராட்சியில் மேலாளராக பணிபுரியும் திருமதி லட்சுமி என்பவர் 17.12.24 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

“கோட்டக்குப்பம் நகராட்சியில் 21.09.2016 முதல் 31.03.2023 வரை வரித்தண்டலராக பணிபுரிந்து 01.04.2023 முதல் 31.05.2023 வரை அரங்கண்டானூர் பேரூராட்சிக்கு பணி மாறுதலில் சென்று வயது முதிர்வு காரணமாக 31.05.2023–ல் ஓய்வு பெற்ற திரு.த.தணிகாசலம் என்பவர் இந்நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் காலம் கடந்த வரியினங்கள் மீது வசூலிக்கப்படாத பொறுப்புத்தொகையை திரு. த. தணிகாசலம் என்பவருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை –28, அவர்களின் ந.க.எண்.30614/2021 ஆர்.1, நாள் 03.12.2021–ன்படி 30% நிர்ணயம் செய்து ரூ.5,79,871/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.1794/2024–ல் தொகை வழங்க கோரி தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கு தீர்ப்பின்படி பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.5,79,871/–க்கான காசோலை எண்.746884 நாள் 12.09.2024 தனிநபர் மூலம் திரு.த.தணிகாசலம் என்பவரிடம் வழங்கப்பட்டு, காசோலை பெறப்பட்டதற்கான ஒப்புகை இரசீது 17.09.2024ம் தேதியிட்டு பெறப்பட்டுள்ளது. மேலும் திரு.த.தணிகாசலம் பெயரில் வங்கி மூலம் 19.09.2024–ல் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, கோட்டகுப்பம் நகராட்சி ஆணையரின்அறிக்கை, கோட்டகுப்பம் நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு. த. தணிகாசலம் என்பவரால் பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட (W.P.No.1794/2024) வழக்கின் தீர்ப்பின்படி பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.5,79,871/– திரு. த. தணிகாசலம் என்பவருக்கு வழங்கப்பட்டு, ஒப்புகை பெறப்பட்டுள்ளது. சேமநல நிதி வட்டி கணக்கீடு செய்யும் பணி முடிந்தவுடன் உரிய முன்மொழிகளை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை, அவர்களின் ஒப்புதல் மற்றும் நிதி பெறப்பட்டவுடன் அனைத்து பணியாளர்களுக்கும் வட்டி தொகையை பகிர்ந்தளிக்கப்படும் போது மனுதாரர் திரு. த. தணிகாசலம் என்பவருக்கும் சேமநல நிதி வட்டி தொகை வழங்கப்படும் என மனுதாரரின் வழக்கறிஞருக்கும், மனுதாரருக்கும் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் கோட்டகுப்பம் நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், நகராடசி ஆணையரின் அறிக்கையினை ஏற்று மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதி வட்டித் தொகையினை விரைந்து வழங்கிட உரிய

நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கோட்டகுப்பம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, மார்ச் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. த. தணிகாசலம்,
எண். 2/5 விநாயகர் சோயில் தெரு,
மூலங்கில்பட்டு கிராமம்,
மதரபாக்கம் அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம்,

2) ஆணையாளர்,
கோட்டகுப்பம் நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

25/3/25
செயலாளர்